பூமியே நீ ஆண்டவருக்கு முன்பாய் அதிரு

Tremble, O Earth

Album 28 Song 2

Song 2 பூமியே நீ ஆண்டவருக்கு முன்பாய் அதிரு

Psalm 114 – Beautiful poetic remembrance of the Exodus. The sea fled, Jordan turned back, mountains skipped — all creation trembled at the presence of the God of Jacob.

பூமியே
நீ ஆண்டவருக்கு முன்பாய் அதிரு
பூலோகமே
நீ யாக்கோபின் தேவனுக்கு முன்பாய் அதிரு

கடலே
நீ கர்த்தருக்கு விலகி ஓடிடு
யோர்தானே
நீ யாக்கோபின் தேவனுக்கு பின்னிட்டு திரும்பு

இஸ்ரவேலே
நீ ஆண்டவருக்கு ராஜ்யமானாய்
யூதாவே
நீ தேவனுக்கு பரிசுத்த ஸ்தானமானாய்

இஸ்ரவேலே
நீ எகிப்தில் இருந்து புறப்பட்டாய்
யாக்கோபே
நீ அந்நிய பாஷைக்காரரான ஜனத்தில் இருந்தாய்

மலைகளே
ஆட்டுகடாக்களைப்போல துள்ளினது ஏன்?
குன்றுகளே

ஆட்டுக்குட்டிகளைப்போல துள்ளினது ஏன்?

கர்த்தரே
கன்மலையை தண்ணீர் தடாகமாக்குவார்
மெய்தேவனே
கற்பாறைகளை நீரூற்றாய் மாற்றுவார்